# மேல்நிலை முதலாம் ஆண்டு

## அறஇயல்

## மாதிரி வினாத்தாள்

காலம்: 2 ½ மணி மதிப்பெண் : 90

**பகுதி – I**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** (20 x 1 = 20)
**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. Ethos என்ற சொல்லானது
(அ) கிரேக்கச் சொல் (ஆ) ஆங்கிலச் சொல்
(இ) இரஷ்யச் சொல் (ஈ) இலத்தீன் சொல்

2. இந்து சமயத்தின் புனித நூலானது
(அ) குர்ரான் (ஆ) பௌத்தம்
(இ) பகவத் கீதை (ஈ) பைபிள்

3. மனதைப் பக்குவப்படுத்துவது
(அ) சமயம் (ஆ) யோகா
(இ) உடற்பயிற்சி (ஈ) ஆன்மீகம்

4. இயற்பியல் என்பது
(அ) உள்ளத்தியல் (ஆ) மருத்துவ இயல்
(இ) நேர்நிலை அறிவியல் (ஈ) உயர்நிலை அறிவியல்

5. எல்லோருக்கும் கட்டாயக் கல்வி அளிப்பது என்பது
(அ) நேரடி உட்கிடை (ஆ) மறைமுக உட்கிடை
(இ) உடனடி உட்கிடை (ஈ) உள்ளார்ந்த உட்கிடை

6. ஒரு மாணவன் மேல்நிலைப் பள்ளியில் பாடங்களைத் தேர்ந்தெடுப்பது என்பது
(அ) தீர்மானக் கொள்கை (ஆ) சுயதீர்மானக் கொள்கை
(இ) தீர்மானிக்கப்படாதது (ஈ) சுயநலக் கொள்கை

7. நல்லொழுக்க நற்பண்பு என்பது
(அ) அறச்செயல் (ஆ) அறம் சாராச் செயல்
(இ) உளச்செயல் (ஈ) அனிச்சைச் செயல்

8. உட்கிடை என்பது
(அ) குறிக்கோள் (ஆ) எண்ணங்கள்
(இ) நடத்தை (ஈ) பழக்கம்

9. 'ஐந்து சுதந்திரங்கள்' அனைத்து நாடுகளும் ஏற்கும் வகையில் வெளியிட்டவர்
(அ) மெக்கன்ஸி (ஆ) ரூஸ்வெல்ட் – சர்ச்சில்
(இ) காண்ட் (ஈ) லயர்ட்

10. நடுநிற்றல் பேறறத்தின் வாயிலாக பயிற்சியை நல்குவது
(அ) அரசு (ஆ) குடும்பம்
(இ) சமுதாயம் (ஈ) நாடு

11. வரதட்சணை வாங்குவதும், கொடுப்பதும் சட்டப்படி
(அ) அவரவர் விருப்பம் (ஆ) சரியானவை
(இ) செயலற்றது (ஈ) குற்றம்

12. இந்து திருமணச் சட்டம் வெளியிடப்பட்டது
(அ) 1945–ம் ஆண்டு (ஆ) 1955–ம் ஆண்டு
(இ) 1975–ம் ஆண்டு (ஈ) 1965–ம் ஆண்டு

13. நாலடியாரை தொகுத்து வெளியிட்டவர்
(அ) கம்பர் (ஆ) பதுமனார்
(இ) சமண முனிவர்கள் (ஈ) வால்மீகி

14. மெய்ப்பொருள் என்பது எது?
(அ) கல்வி (ஆ) உண்மை
(இ) நீதி (ஈ) கடமை

15. பயன் கருதாது தன் கடமையாற்றுவது
(அ) உண்மை பேசுதல் (ஆ) நேர்மையாயிருத்தல்
(இ) கர்மயோகி (ஈ) நிஷ்காம்ய கர்மா

16. அரசியல் அமைப்புடைய பெரிய நிறுவனம்
அ) நாடு (ஆ) சமூகம்
(இ) மக்கள் மன்றம் (ஈ) பஞ்சாயத்து

17. யோகாசனத்தை மனித குலத்திற்கு வழங்கியவர்
(அ) மகரிஷி பதஞ்சலி (ஆ) ஹிரண்ய கர்பர்
(இ) வால்மீகி (ஈ) வியாச முனிவர்

18. மன அலைகளை அடக்கி ஒருமுகப்படுத்தும் ஆசனம்
(அ) யோகாசனம் (ஆ) உடற்பயிற்சி
(இ) மனப்பயிற்சி (ஈ) இமயம்

19. சிந்தனையை ஒருமுகப்படுத்துவது
(அ) தாரணை (ஆ) இமயம்
(இ) நியமம் (ஈ) கழிமுகம்

20. இடங்கலை, பிங்கலை, கழிமுனை என்பது
(அ) மூச்சின் இயக்கம் (ஆ) உடலின் இயக்கம்
(இ) உணர்வுகள் (ஈ) இரத்த ஓட்டம்

**பகுதி – II**

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** (7 x 2 = 14)
**21 வது வினாவிற்கு கண்டிப்பாக விடையளிக்கவும்**

21. அண்மைக் காலங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உளவியல்கள் யாவை?
22. அறிவியல் என்றால் என்ன?
23. அறஞ்சாரா செயல்கள் யாவை?
24. இயற்றி நிலையின் மூன்று கொள்கைகள் யாவை?
25. சமுதாய நலன் என்றால் என்ன?
26. பிறர்நலக் கொள்கை பற்றி ஸ்பென்சரின் கருத்து யாது?
27. குற்றம் – வரையறு
28. பயங்கரவாதம் எனப்படுவது யாது?
29. வாழ்வியல் உறுதிப்பொருட்கள் நான்கினை எழுதுக.
30. ஆசனம் என்றால் என்ன?

**பகுதி – III**

(7 x 3 =21)
**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**(39 வது வினாவிற்கு கண்டிப்பாக விடையளிக்கவும் )**

31. இரத்தலை குறித்து மார்க்ஸ் வெபரின் கருத்து யாது?
32. அறஇயல் உணர்த்தும் உண்மைகள் யாவை?
33. தத்துவ இயல் பற்றி விளக்குக.
34. தீர்மானிக்கப்படாத கொள்கையினை விவரி.
35. அகநிலை அறப்பண்பு விளக்குக.
36. சமுதாயம் குறித்து காந்தியின் கருத்து யாது?
37. கீழ்மைக் குணங்களாக குறிப்பிடப்படுவன யாவை?
38. கல்வியின் மேன்மை குறித்து கொன்றை வேந்தன் கூறுவன யாவை?
39. மனிதன் ஏன் அறங்களை போற்றி வாழ்தல் வேண்டும்?
40. குருவின் மேன்மையைப் பற்றி எழுதுக.


http://www.trbtnpsc.com/2017/08/11th-public-exam-official-govt-model-question-papers-download.html

## பகுதி – IV

(7 x 5 = 35)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்**

41. அற இயலின் பயன்கள் ஐந்தினைக் கூறுக.

(அல்லது)

அறஇயலுக்கும், அறிவியலுக்கும் உள்ள தொடர்பினை விவரி.

42. அறச்செயல், அறஞ் சாராச் செயல்கள் பற்றி விவரி.

(அல்லது)

பழக்கம், நடத்தை, நடத்தையின் அகநிலை அறப்பண்பினை விவரி.

43. தன்னலக் கொள்கையின் நிறை குறைகள் யாவை?

(அல்லது)

மூவகை நலக்கொள்கைகள் பற்றி ஒரு மதிப்பீடு செய்க.

44. கல்வி பெறுவதன் குறிக்கோள்கள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.

(அல்லது)

குடிமக்களின் நற்பண்புகள் யாவை?

45. மூவகை தண்டனைக் கொள்கைகளை விவரி.

(அல்லது)

வரதட்சணையை தடுப்பதற்கான வழிமுறைகள் யாவை?

46. போதைப் பொருள் அடிமையாதலின் தீய விளைவுகள் யாவை?

(அல்லது)

இந்தியா – இரஷ்யா கூட்டுப் பிரகடனம் பற்றி ஏதேனும் ஐந்தினை எழுதுக.

47. திருக்குறளில் கூறப்பட்ட ஏதேனும் நான்கு அறங்களை எழுதி விளக்குக.

(அல்லது)

ஆசனங்கள் ஏதேனும் ஐந்தினை விவரித்து அதன் பயன்களை எழுது.

-------



www.Padasalai.Net